NOOLAHAM
FOUNDATION

# நூலக நிறுவனம்
# மாதாந்த அறிக்கை
# ஆனி 2019

தொகுப்பு : மியூரி கஜேந்திரன், ஆர்த்தியா சத்தியமூர்த்தி, ஷாலினி யதூஸ்

மேற்பார்வை : குலசிங்கம் சோமராஜ்

தொகுப்பு திகதி : **2019-07-05**

ஒப்புதல் : ஆளுகை அவை - நூலக நிறுவனம்

ஒப்புதல் திகதி : **2019-07-27**

**வணக்கம்**

நூலக நிறுவனத்தின் 2019 ஆனி மாத ஆவணமாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

## எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)

| | | | June |
|---|---|---|---|
| மின்வருடல் | நூலகம் | ஆவணங்கள் | 635 |
| | | பக்கம் | 63,014 |
| | யாழ்நூலகம் | ஆவணங்கள் | 4 |
| | | பக்கம் | 396 |
| | யாழ்பல்கலை | ஆவணங்கள் | 0 |
| | | பக்கம் | 0 |
| | மொத்தம் | ஆவணங்கள் | 639 |
| | | பக்கம் | 63,410 |
| சரிபார்க்கப்பட்டது | | ஆவணங்கள் | 498 |
| | | பக்கம் | 53,876 |
| பக்கம் தவறியது | | ஆவணங்கள் | 13 |
| | | பக்கம் | 1,957 |
| தரமேம்படுத்தியது | | ஆவணங்கள் | 3 |
| | | பக்கம் | 238 |
| பக்கம் சிதைந்தது | | ஆவணங்கள் | 2 |
| | | பக்கம் | 466 |
| மீள்வருடப்பட்டது | | ஆவணங்கள் | 5 |
| | | பக்கம் | 732 |
| வலைத்தளத்தில் அடங்காதவை | | ஆவணங்கள் | 0 |
| | | பக்கம் | 0 |

**எண்ணிம நூலகம் (Digital Library)**

- ஆவணங்களுக்கான 390 பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.
- ஆவணங்களுக்கான 569 கட்டுரை இணைக்கப்பட்டுள்ளது.
- 1,077 ஆவணங்கள் வலைத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது.

**சேகர அபிவிருத்தி (Collections Development)**

இம் மாதம், செம்பியன் செல்வன், செங்கை ஆழியான், குமாரவேல், வே., செவ்வமனோகரன், ஆகிய எழுத்தாளர்களுடைய ஆவணங்களும் சசூலன், பரணிதரன், பத்மநாபஐயர், குமரன், குமாரசாமி சோமசுந்தரம், அளவெட்டி சௌந்தரராஜன் ஐயர் ஆகியோரால் சேகரிக்கப்பட்ட ஆவணங்களும் மற்றும் சாவகச்சேரி நூலகம், இலங்கைப் பனை அபிவிருத்திச் சபை, ஆகியவற்றினது ஆவணங்களும் மின்வருடப்பட்டுள்ளன. ஆவணங்களை பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள். அரியாலையில் இருந்து 30 புத்தகங்கள் ஆவணப்படுத்துவதற்க்காக எடுத்து வரப்பட்டு ஆவணப்படுத்திய பின்னர் மூளக் கொடுக்கப்பட்டது.

**ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)**

ஆனி மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணமாக்குவதற்கான அனுமதியினை பதிவு செய்துள்ளனர்.

- வெளியீட்டாளர்கள் - இல்லை
- எழுத்தாளர்கள் - இல்லை

**காப்புப்படி (Backup)**

63001-66700 வரையான ஆவணங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு வன்தட்டுக்களில் காப்புப்படி எடுக்கப்பட்டுள்ளது.

**Master-files and Applications Backup**

இம்மாதம் எடுக்கப்படவில்லை. கடைசியாக மார்கழி 2018 .இல் எடுக்கப்பட்டது.

**ஆவணகம் வலைத்தளம் (aavanaham.org)**

ஆவணகம் (aavanaham.org) வலைத்தளத்தில் ஆனிமாதம் கீழ்வரும் விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| மொத்த ஆவணங்கள் | 166 |
| | June |
| குறுங்கால ஆவணங்கள் | 47 |
| படங்கள் சேகரம் | 71 |
| எண்ணிம எழுத்தாவணங்கள் | 12 |
| ஒலிச் சேகரம் | 4 |
| கல்வி வளங்கள் | 10 |
| வாய்மொழி வரலாறுகள் | 13 |
| நூற்பட்டியல் | 7 |
| இடங்கள் | 1 |
| ஓவியங்கள் சேகரம் | 1 |
| | |

**பயனர் சேவை (User Service)**

| | நூலகம் | ஆவணகம் |
|---|---|---|
| | June | |
| பயனர்கள் | 26,757 | 1,832 |
| புது பயனர்கள் | 21,748 | 1,641 |
| முன்னைய பயனர்கள் | 5,009 | 191 |
| புது பயனர்கள் வீதம் | 81.28% | 89.57% |
| பார்வையிட்ட பக்கங்கள் | 276,020 | 13,699 |
| சராசரி நேரம் | 0:04:24 | 0:04:05 |
| முதற்பக்கவெளியேறல் வீதம் | 49.97% | 47.76% |

**செயற்றிட்டங்கள் (Projects)**

## 1. EAP

இம்மாதத்திற்கான (ஆனி மாதம்) EAP (1260) செயற்றிட்டத்திற்கு அமைவாக பன்னிரண்டு கட்டுக்கள் கொண்ட 2416 பக்க சுவடிகள் சுத்தம் செய்யப்பட்டு, எண்ணிமப்படுத்தப்பட்டன. அவை தொடர்பான விபரங்கள் மூதரவுத்தாளில் பதியப்பட்டன. இச் சுவடிக்கட்டுக்கள் யாப்பருங்கலக் காரிகை, சூடாமணி, மாட்டு வைத்தியம் ஆகியவனவும், சில கட்டுக்களுக்கு பெயர் இனங்காண முடியாதவாறும் அடையாளங்காணப்பட்டன.

கோண்டாவிலில் வசித்து வரும் கிருஷ்ணராஜா அவர்களிடம் இருந்து 1000 பக்கங்கள் கொண்ட 16 சுவடிக்கட்டுக்கள் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டது. அவை எண்ணிமப்படுத்துவதற்க்காக அலுவலகத்திற்கு எடுத்துவரப்பட்டது.

மேலும் ஜோகநாதன் கதிர்காமு அவர்களிடம் உள்ள இரண்டு கட்டு சுவடிகளுக்கான அனுமதிப் பத்திரத்தில் கையொப்பமும் பெறப்பட்டது.மேலும் சிவகுமாரி கிருஷ்ணராஜா அவர்களின் எண்ணிமப்படுத்தப்பட்ட சுவடுகளுக்கான இறுவட்டுக்கள் கையளிக்கப்பட்டது.

## 2. தொழிற்கலை ஆவணப்படுத்தல்

இம்மாதத்திற்கான (ஆனி மாதம்) தொழிற்கலை ஆவணப்படுத்தல் செயற்திட்டத்திற்கு அமைவாக வடக்கில் புகையிலை சார்ந்த உற்பத்திப் பொருட்கள் தொடர்பாக புகையிலைச் செய்கை, புகையிலைக்கு பாணி போடுதல், சுருட்டு சுற்றுதல் போன்ற தொழிற்கலைகளும் அவற்றுக்கான புகைப்படங்கள் மற்றும் காணொளிகளும், வாய்மொழி வரலாறுகளும் ஆவணப்படுத்தப்பட்டன. இவை கொக்குவில் மேற்கு, சுன்னாகம் ஆகிய இடங்களில் ஆவணப்படுத்தப்பட்டது.

மேலும் பனைமர உற்பத்தி மற்றும் உணவுப் பொருள் தொடர்பான தொழிற்கலை ஆவணப்படுத்தலில் பனைமரத்தினால் செய்யப்பட்ட அலங்கார மற்றும் பயன்பாட்டுப் பொருட்களும் அதாவது இடியப்பத்தட்டு, அகப்பை, கைப்பை,பாய் கூடை தட்டம் போன்றனவும் ஆவணப்படுத்தப்பட்டன. மேலும் பனையோலை சார்ந்த உற்பத்திப் பொருட்களுக்கு சாயம் பூசுதல், கருப்பணி காய்ச்சுதல் மற்றும் செயன்முறை விளக்கம் என்பன புகைப்பட மற்றும் காணொளிப் பதிவுகளின் மூலம் ஆவணப்படுத்தப்பட்டது.

இவற்றை விட பனைமரத் தண்டில் இருந்து பெறப்படும் பயன்பாட்டுப் பொருட்கள் அதாவது சிலாகை, வளை மற்றும் வீட்டு கூரைக்கு தேவையான மரங்கள் செய்யும் செயல் முறையும் ஆவணப்படுத்தப்பட்டது.

மேலும் பனைமர உணவுப்பொருட்களும் புகைப்பட, காணொளி மற்றும் வாய்மொழி வரலாற்றுப் பதிவுகளுடன் ஆவணப்படுத்தப்பட்டது. அந்தவகையில் பனங்கட்டி, பாணிப் பனாட்டு, பனம் பழப் பானம், பாம்போஷா, புழுக்கொடியல், பனம் பழரசம், ஒடியல் மா, கருப்பணி, பனம் களி போன்றன புகைப்பட மற்றும் காணொளிப் பதிவுகளின் மூலம் ஆவணப்படுத்தப்பட்டது.

பனைமர உற்பத்தி மற்றும் உணவுப் பொருள் ஆனவை நல்லூர், நெல்லியடி, தெல்லிப்பளை,பண்டத்தரிப்பு, சங்கானை, கைதடி ஆகிய இடங்களில் கள ஆய்வு செய்யப்பட்டது.

வாழைநார் சார்ந்த கைத்தொழில் தொழிற்கலை சார்ந்த ஆவணப்படுத்தல் நீர்வேலி வடக்கில் மேற்கொள்ளப்பட்டது. இங்கு வாழைநார் உற்பத்திப் பொருட்களான கடதாசி, துடைப்பான், போத்தல்கள் வைக்கும் பை, தேநீர் வைக்கும் தட்டம் , கைப்பை ,தொப்பி, பொம்மையின் தொப்பி போன்றன புகைப்பட மற்றும் காணொளிப் பதிவுகளின் மூலம் ஆவணப்படுத்தப்பட்டது.

## 3. வாய்மொழி வரலாறு ஆவணப்படுத்தல்

இம்மாதத்திற்கான (ஆனி மாதம்) வாய்மொழி வரலாறு ஆவணப்படுத்தல் செயற்றிட்டத்திற்கு அமைவாக வடக்கில் 14 வாய்மொழி வரலாறுப் பதிவுகளும் மலையகத்தில் 16 வாய்மொழி வரலாற்றுப் பதிவுகளும் பதிவுசெய்யப்பட்டன.

## 4. அரியாலை ஊர் ஆவணப்படுத்தல்

இம்மாதத்திற்கான (ஆனி மாதம்) அரியாலை ஊர் ஆவணப்படுத்தல் செயற்திட்டத்திற்கு அமைவாக அரியாலை ஊர் ஆவணப்படுத்தல் தொடர்பான நூல் தொகுப்பு இடம்பெற்றது.

மேலும் அரியாலையில் இருந்து 04 வாய்மொழி வரலாற்றுப் பதிவுகளும் பதிவுசெய்யப்பட்டன..

**5. கோவில்கள் ஆவணப்படுத்தல்**

இம்மாதத்திற்கான (ஆனி மாதம்) கோவில்கள் ஆவணப்படுத்தல் செயற்றிட்டத்திற்கு அமைவாக வடக்கில் தம்பசிட்டி கோயில்கள் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளுடன் ஆவணப்படுத்தப்பட்டது.

**வழிகாட்டுநர் சபை (Regulatory Board)**

இம்மாதம் இரு கூட்டங்கள் இடம்பெற்றன. அதற்கான இணைப்பு

- ஆனி 08, 2019

https://docs.google.com/document/d/1LxCoJ7fo5XRu9Vn7YPiUrs2W0TmLg5N1FaBZHYO9Xuo/edit

- ஆனி 29, 2019

https://docs.google.com/document/d/1C8AyaF3Z1gw-st_5KIV17lHceZL82PxBcB_VBlEdIYQ/edit

**வரவு செலவு அறிக்கை (Financial Statement)**

**செலவு**

| | |
|---|---:|
| ஆளணியிருக்கான கொடுப்பனவுகள் | 311,368.00 |
| தொடர்பாடல் | 7,922.67 |
| மின்சாரம் | 4,577.10 |
| வாடகை | 30,000.00 |
| உபகரணங்களிற்கான செலவு | 534,300.00 |
| நிர்வாகச் செலவு | 19,698.00 |
| செயற்றிட்டச் செலவு | 117,000.00 |
| ஏனைய செலவுகள் | 52,381.00 |
| **மொத்த செலவு** | **1,077,246.77** |

* அண்ணளவான மதிப்பீடு

**வரவு**

| **நன்கொடை** | **June** |
|---|---:|
| நூலகம் - UK | 207,303.13 |
| நூலகம் -டென்மார்க் | 38,000.00 |
| நூலகம் - அவுஸ்ரேலியா | 72,000.00 |
| நூலகம் - கனடா | 231,900.00 |
| நூலகம் - இலங்கை | 25,000.00 |
| நூலகம் - ஐ.அமெரிக்கா | 110,000.00 |
| | 105,000.00 |
| **மொத்த வரவு** | **789,203.13** |

இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகின்றது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

நூலக நிறுவனம்